**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.214/2018**

**இ.ம.எண்.07/2025**

1) கமலம் (எ) கமலா ...**மனுதாரர்/வாதி**

**/எதிர்/**

1) சங்கர்

2) காந்தி

3) ராஜேஸ்வரி

4) சுஜி

5) அகிலாம்பாள்

6) விஜயலட்சுமி

7) ஆணையர்

8) தனி தாசில்தார்

9) கோட்டாட்சியர்–குளித்தலை

10) மாவட்ட ஆட்சியர்–கரூர் ..**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனு எனது முன்னிலையில் இன்று 11.11.2025ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சிவசுப்ரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சக்திவேல் அவர்கள் முன்னிலையாகிவும், 7 முதல் 10 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. K.S.M. சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜாராகாத காரணத்தினால் அவர்களை தோன்றாத் தரப்பினார்களாகக் கொண்டும் மற்றும்

இரு தரப்பில் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/வாதியால் மேற்படி வழக்கின் வழக்கு விசாரணையை திறக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** 1 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் மேற்படி அசல் வழக்கின் 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் ஆவார்கள். மேற்படி வழக்கில், இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவிலும் 1 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளனர்.

**மனுதாரர் மனுவின் சுருக்கம்:**

**3)** மனுதாரர் மேற்படி வழக்கின் வாதியாவார். மேற்படி வழக்கு, கடந்த 28.08.2025 அன்று வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் 6ம் பிரதிவாதி பி.வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் மேற்கண்ட வழக்கை நடத்த முன்வராததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளது.

**4)** பி.வா.சா.1 அவரது சாட்சியத்தின் போது, 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளிடம், தான் சொத்தை கிரையம் பெற்றதாக கூறி, ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தை (பதிவு எண்.17/2009) பி.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணம் மனுதாரருக்கு உரிமையான தாவா சொத்தை, மோசடி செய்து அபகரித்துக்கொள்ளும் தீய எண்ணத்தில் திட்டமிட்டு கூட்டு சதி செய்து ஏற்பட்டதாகும். தாவா சொத்து மனுதாரரின் பூர்வீக சொத்து என்பதால்,

மனுதாரருக்கு சட்டப்படியான வாரிசு என்ற முறையில் தாவா சொத்தில் உரிமை உள்ளது. ஆனால் அதை மறைத்து மேற்படி ஆவணம் சட்டத்திற்கு புறம்பாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

5) எனவே, மேற்சொன்ன ஆவணங்களை செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்படி வழக்கின் வழக்குரையை திருத்தம் செய்வது அவசியம் ஆகும். அதனால் மேற்படி வழக்கு விசாரணையை திறக்க வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமாகிறது. இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

__6ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரையின் சுருக்கம்:__

6) மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவை இம்மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுவிற்கு முற்றிலும் சம்மந்தம் இல்லாத சங்கதிகளை குறிப்பிட்டு, மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் யாவும் நம்பும்படியாக இல்லை.

7) இம்மனுவானது உரிய காலத்தில் தாக்கல் செய்யவில்லை. தற்போது மனு தாக்கல் செய்து இருப்பது நீதியின் பரிபாலனத்திற்கு குந்தகமானது ஆகும். மனுதாரர் கோரியுள்ள மற்ற பரிகாரத்திற்கு மனுதாரர் எவ்விதத்திலும் தகுதியுடையவர் இல்லை.

8) மனுதாரருக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டதா இல்லையா என தீர்மானிக்க எவ்வித பரிகாரமும் கோராமல் எடுத்த எடுப்பிலே 6ம் எதிர்மனுதாரர்/6ம் பிரதிவாதி

பெயரில் உள்ள கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல எனவும், வழக்குரை தாக்கல் செய்து சுமார் 7 வருடங்கள் ஆன நிலையில் வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, சாட்சிகளின் வாயிலாக தரப்பினர்கள் தங்களது கட்சியை முழுவதுமாக நிரூபிக்கப்பட்டுள்ள நிலையிலும், இரு தரப்பு வாதுரைக்ககு வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டி மேற்படி வழக்கு விசாரணையை திறக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல.

**9)** மனுதாரருக்கு வழக்கு தாக்கல் செய்ய எவ்வித உரிமை மாற்றமோ, உரிமைமூலமோ இல்லாத நிலையில் 6ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை ரத்து செய்ய பரிகாரம் கேட்டு மேற்படி அசல் வழக்கு விசாரணையை திறக்கக் கோரி மனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல. மனுதாரர் தூய்மையான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. மனுதாரரின் மனு மோசடியானது. எனவே, இம்மனு எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய தகுதியாகும்.

**<u>7 முதல் 10 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்மனுவுரை ஆட்சேபனையின் சுருக்கம்:</u>**

**10)** மனுதாரரின் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவில் கண்ட பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதல்ல. இந்த எதிர்மனுதாரர்கள் நேரடியாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். மனுவில் 1 முதல் 7 வரை உள்ள பத்தியில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு. அவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும்.

**11)** மேற்படி வழக்கில், வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டு, அதன் பிறகு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்ட நிலையில், தற்சமயம் வழக்கின் பரிகாரத்தை மாற்ற வேண்டி மேற்படி வழக்கு விசாரணையை திறக்கக் கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு எவ்விதத்திலும்

நியாயமும், தர்மமும் இல்லை. மேற்படி வழக்கை காலம் கடத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் எவ்வித முகாந்திர காரணமும் இல்லை. எனவே, இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

**12)** மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**13)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் இல்லை. ஆவண சாட்சியங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

**14)** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில், மேற்படி வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தைப் பொறுத்து 6ம் எதிர்மனுதாரர்/6ம் பிரதிவாதியால் அத்துமீறி கட்டியுள்ள கட்டிடத்தை அப்புறப்படுத்திட வேண்டி செயலுறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காகவும், 1 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டாவை நீக்கி தாவா சொத்திற்கு வாதி மற்றும் 5ம் பிரதிவாதி பெயரில் சரிபாதியாக பிரித்து பட்டா வழங்கிட 7 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காகவும், மற்றும் தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என்று 1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிகிறது.

**15)** மேலும், மேற்படி வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, மேற்படி வழக்கானது இரு தரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி வழக்கில் உள்ள பரிகாரத்தை

திருத்தம் செய்ய வேண்டியும், அதனைப் பொறுத்து விசாரணை மேற்கொள்ள மேற்படி வழக்கு விசாரணையை திறக்கக் கோரி இம்மனுவை மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில், 6ம் பிரதிவாதியானவர் பி.வா.சா.1 ஆக மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்டு, அவரது சாட்சியத்தின் மூலம் 1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகளிடம் இருந்து தாவா சொத்தை 6ம் பிரதிவாதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் பதிவு எண்.17/2009 ன்படி கிரையம் பெற்றுள்ளதாகவும் கூறி, மேற்படி ஆவணத்தை பி.சா.ஆ.1ஆக குறியீடு செய்தபோதுதான் மேற்படி ஆவணம் குறித்து வாதிக்கு தெரிய வந்ததாக கூறியுள்ளார்.

**16)** மேலும், மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணமானது மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை மோசடி செய்து அபகரித்துக் கொள்ளும் தீய எண்ணத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றும், தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதால் வாரிசு அடிப்படையில் மனுதாரருக்கு அதில் உரிமை உள்ளது என்றும், அதனை மறைத்து ஏற்படுத்தப்பட்ட மேற்சொன்ன ஆவணமானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அதனை குறித்து விளம்புகை பரிகாரம் கோர வேண்டி, மேற்படி வழக்கில் வழக்குரையை திருத்தம் செய்வது நீதியின் பொருட்டு அவசியமானது என்றும், அதனால் மேற்படி வழக்கு விசாரணையை திறக்க வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

**17)** மாறாக, 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை மனுதாரர் உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல் செய்திருப்பது நீதியின் பரிபாலனத்திற்கு குந்தகமானது என்றும், தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் மேற்சொன்ன ஆவணத்தை செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்ய வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டி மேற்படி வழக்கு விசாரணையை திறக்கக் கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், வழக்குரை தாக்கல் செய்து 7 வருடங்கள் ஆன நிலையில் மேற்படி வழக்கில் வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள

நிலையிலும், வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டியிருப்பது ஏற்புடையதல்ல என்றும் கூறப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, 7 முதல் 10 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில், இம்மனு மேற்படி வழக்கை காலம் கடத்த வேண்டுமென்றே வாதியால் தாக்கல் செய்திருப்பதாகவும், மனுதாரருக்கு மனுவில் எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

**18)** இரு தரப்பு வாதங்கள் மற்றும் மேற்படி வழக்கில் இரு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் ஆவணங்களையும் பரிசீலனை செய்ததன் அடிப்படையில், தாவா சொத்தானது ஆதியில் பெருமாள் மூக்கன் என்பவருக்கு பாத்தியப்பட்டு, அவரது இறப்பிற்கு பின்பு அவரது மூன்று மகன்களான சீரங்கன், ஆழ்வார் (வாதியின் தந்தை) மற்றும் லெட்சுமணன் (5ம் பிரதிவாதியின் தந்தை) ஆகிய மூவருக்கும் பாத்தியப்பட்டு அவர்களது அனுபவத்தில் இருந்து வந்ததாகவும், அதில் மேற்படி சீரங்கன் உயிருடன் இருந்தபோதே வாய்மொழியாக வாதியின் தந்தையிடம் தமது பங்கை தனியாக பிரித்துக் கொண்டு சென்றுவிட்டதாகவும் வாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது.

**19)** மேலும், அதனைத் தொடர்ந்து வாதியின் தந்தை ஆழ்வார், 5ம் பிரதிவாதியின் தந்தையான லெட்சுமணன் ஆகியோர் தாவா சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வந்ததாகவும், ஆழ்வார் மற்றும் லெட்சுமணன் இறந்து விட்டதாகவும், ஆழ்வார்க்கு ராமசாமி மற்றும் வாதி மட்டுமே வாரிசு என்றும், அதில் ராமசாமி மாமனார் வீட்டிலேயே வீட்டோடு மாப்பிள்ளையாக சென்றுவிட்டதோடு தாவா சொத்தில் அவருக்கு உரிய பாகத்தை வாதியிடம் ரொக்கம் பெற்று விற்பனை செய்து விட்டதாகவும், ராமசாமியின் பாகத்தையும் சேர்த்து தாவா சொத்தை வாதியும், 5ம் பிரதிவாதியும் கூட்டாக அனுபவம் செய்து வந்ததாகவும், அதனைத் தொடர்ந்து தாவா சொத்தை வாதியும் 5ம் பிரதிவாதியும் வாய்மொழியாக சமமாக பிரிவினை செய்து கொண்டு அனுபவம் செய்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

**20)** இந்நிலையில், தாவா சொத்தில் 6ம் பிரதிவாதியும் அவரது கணவரும் வீடு கட்ட ஆரம்பித்ததாகவும், 6ம் பிரதிவாதியின் கணவருக்கு வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதற்கு ஆட்சேபனை செய்தபோது, மேற்படி அறிவிப்பையும் மீறி 6ம் பிரதிவாதியும் அவரது கணவரும் கட்டிடம் கட்டினார்கள் என்றும், இந்நிலையில் கடந்த 29.10.2017 அன்று பிரதிவாதிகளை சந்தித்து தாவா சொத்து மற்றும் அதற்கான பட்டாவை மாற்றி தரும்படி கேட்டபோது, தாவா சொத்தை 6ம் பிரதிவாதி கிரையம் வாங்கிவிட்டதாகவும், தாவா சொத்தில் வாதிக்கு உரிய சமமான நிலத்தை அபகரிக்க வேண்டி 1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் திட்டமிட்டு 5ம் பிரதிவாதிக்கு சிறிது அதிகமான நிலத்தை கொடுத்து, 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் மீதி நிலத்தை 6ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து பட்டா மாற்றம் செய்துள்ளார்கள் என்றும், அதற்கு 7 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் உடந்தையாக இருந்து செயல்பட்டார்கள் என்றும் கூறி, மேற்படி பரிகாரத்திற்காக மேற்சொன்ன வழக்கை மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்பது தெரிகிறது.

**21)** மாறாக, மேற்படி வழக்கில் 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் அவர்கள் நீதிமன்றத்திற்கு ஆஜாராகாத காரணத்தினால் அவர்கள் தோன்றாத்தரப்பினர்களாக அறிவிக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி வழக்கின் 6ம் பிரதிவாதி தாவா சொத்து ஒரு அரசாங்க புறம்போக்கு நிலம் என்றும், தாவா சொத்தைப் பொறுத்து பட்டாவானது மேற்சொன்ன ராமசாமி, த/பெ. ஆழ்வார் மற்றும் லெட்சுமணன் ஆகியோர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி ராமசாமி மற்றும் லெட்சுமணன் ஆகியோர் வாய்கராராக பாகப் பிரிவினை செய்து, அதில் தாவா சொத்தானது ராமசாமியின் பங்கிற்கு ஒதுக்கப்பட்டது என்றும், ராமசாமி கடந்த 05.01.2002 அன்று அவரது மனைவி முத்தம்மாள் மற்றும் அவரது மகன்கள் கலியமூர்த்தி மற்றும் சங்கர் மற்றும்

அவரது மகள் காந்தி ஆகியோரை வாரிசாக விட்டுசென்று இறந்துவிட்டதாகவும், 6ம் எதிர்மனுதாரர்/6ம் பிரதிவாதி வருவாய்த் துறை ஆவணங்கள், வில்லங்க சான்று ஆகியவற்றை பரிசீலனை செய்துவிட்டு தாவா சொத்து அமைந்துள்ள ஊரில் உள்ள நபர்களை விசாரணை செய்திட்ட பின்பே, முறையாக பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் வாயிலாக கடந்த 06.01.2009 அன்று மேற்படி ராமசாமி மனைவி முத்தம்மாள் மற்றும் அவரது மகன்கள் மற்றும் மகள் ஆகியோரிடமிருந்து, தகுந்த மறுபயனுக்கு உரிய முறையில் கிரையம் பெற்றுள்ளார் என்றும், எனவே வாதி கோரியுள்ளபடி எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், 6ம் பிரதிவாதி தரப்பில் கட்சி செய்யப்பட்டுள்ளது.

**22)** அதுமட்டுமல்லாமல், 7 முதல் 10 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வாதியின் வழக்கை மறுதளித்தும், வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும் கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**23)** இவ்வாறு இருக்கையில், தாவா சொத்தைப் பொறுத்து, கடந்த 06.01.2009ம் தேதி 6ம் பிரதிவாதிக்கு மேற்படி ராமசாமியின் மனைவி முத்தம்மாள் மற்றும் ராமசாமியின் மகன்கள் மற்றும் மகள் ஆகியோர் ஏற்படுத்தியுள்ள பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தை செல்லத்தக்கதல்ல என்று கூறி விளம்புகை செய்திட, மேற்படி வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில், இவ்வழக்கானது கடந்த 12.10.2018 அன்று தாக்கல் செய்யப்பட்டு, அதில் 6ம் பிரதிவாதி கடந்த 04.06.2019அன்று அவர் தரப்பு எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார் என்பது தெரிகிறது. மேலும், வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையை பரிசீலனை செய்ததில், தாவா சொத்தில் 6ம் பிரதிவாதியும் அவரது கணவரும் வீடு கட்டியபோது அதனை குறித்து வாதி கேட்டபோது தாவா சொத்தை 6ம் பிரதிவாதி கிரையம் வாங்கிவிட்டதாக பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**24)** இதுமட்டுமல்லாமல், வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மேற்படி ஆவணங்கள் கடந்த 02.12.2009 மற்றும் 03.12.2009 ஆகிய தேதிகளில், 6ம் பிரதிவாதியின் கணவருக்கும், கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இதர வருவாய் துறையினருக்கும் வாதி தரப்பு வழக்கறிஞரால் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் கையிருப்பு நகலாகும். மேற்படி வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பை பரிசீலனை செய்ததில் தாவா சொத்தில் 6ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவரும் சேர்ந்து அத்துமீறி கட்டிடம் கட்டி வருவதாகவும், எனவே, மேற்படி கட்டுமானங்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும், 6ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்தைப் பொறுத்து ஏதேனும் தவறுதலாக ஆவணங்கள் ஏற்பட்டிருந்தால் அதை நீக்க வேண்டியும், மேற்படி அறிவிப்பானது வருவாய் துறையினருக்கு சார்வு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

**25)** எனவே, வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை பரிசீலனை செய்ததிலும் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்ததிலும், தாவா சொத்தை 6ம் பிரதிவாதி கிரையம் பெற்றுவிட்டார் என்ற விவரமானது, இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பும் இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்திலும் வாதிக்கு நன்கு தெரிந்து இருக்கிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையில், 6ம் பிரதிவாதிக்கு 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தாவா சொத்தை விற்பனை செய்து பட்டா மாற்றம் செய்துள்ளார்கள் என்று வாதி வழக்குரையில் ஒப்புக்கொண்டு கூறியுள்ளார். அதுமட்டுமல்லாமல், 6ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், 6ம் பிரதிவாதி தாவா சொத்து சம்மந்தமான வருவாய் துறை ஆவணங்கள், வில்லங்க சான்றிதழ் ஆகியவற்றை பரிசீலனை செய்து உரிய விசாரணைக்கு பின்பே தாவா சொத்தை கடந்த 06.09.2009 அன்று ராமசாமி மனைவி முத்துலெட்சுமி மற்றும் அவரது மகன்கள்

மற்றும் மகள் ஆகியோரிடமிருந்து தகுந்த மறுபயனுக்கு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் வாயிலாக கிரையம் பெற்றுள்ளார் என்று குறிப்பிட்டு கூறியுள்ளார்.

**26)** மேலும், மேற்படி பதிவு செய்யப்பட்ட 06.01.2009 தேதியிட்ட கிரைய ஆவணமானது, பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்கையில், தாவா சொத்தைப் பொறுத்து 6ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவணமானது, இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்திலே வாதிக்கு தெரிந்துள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், ஆட்சேபனைக்குரிய பி.சா.ஆ.3 ஆவணத்தைக் குறித்து, 6ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் தெளிவாக குறிப்பிட்டு கூறியுள்ளார். 6ம் பிரதிவாதி, மேற்படி வழக்கில் கடந்த 04.06.2019அன்று தனது எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார் என்பது தெரிகிறது.

**27)** இவ்வாறு இருக்கும் நிலையில், தாவா சொத்தைப் பொறுத்து உரிமைமூல பிரச்சினை உள்ளது என்பது வாதிக்கு, 6ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை பரிசீலனை செய்யும் போதே தெரிய வந்திருக்கும் என்றும், ஆனால் மேற்படி ஆவணத்தைப் பொறுத்து 3 ஆண்டுகளுக்குள் பரிகாரம் கோராமல் மேற்படி வழக்கில் இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள இந்நிலையில், மேற்படி கிரைய ஆவணத்தை செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்திட கோரி வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியிருப்பதால், மேற்படி வழக்கு விசாரணையை திறக்கக் கோரி வாதியால் இம்மனுவானது கடந்த 04.09.2025 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**28)** தாவா சொத்தைப் பொறுத்து ஏற்பட்ட கிரைய பத்திரத்தின் விபரமானது வாதிக்கு இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்திலும், 6ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னிட்டும் வாதிக்கு தெரிந்து இருந்தது என்றும், ஆனால் தாவா சொத்தைப் பொறுத்து வில்லங்கம் பார்த்து மேற்படி பதிவு செய்யப்பட்ட

கிரைய ஆவணத்தைப் பொறுத்து 6ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்த தேதியிலிருந்து 3 வருடங்களுக்குள் வாதியால் பரிகாரம் கோரி இருக்க முடியும் என்றும், ஆனால் அவ்வாறு 3 வருடங்களுக்குள் பரிகாரம் கோராமல் மேற்படி கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்திட காலம் கடந்து வழக்குரையை மாற்றம் செய்ய மேற்படி வழக்கு விசாரணையை திறக்கக் கோரி தற்சமயம் மனு செய்திருப்பது ஏற்புடையதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், வாதி கோரியுள்ள திருத்தல் பரிகாரமானது, காலவரை வரம்புச் சட்டம், 1963ன் கீழ் காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. காலம் கடந்து வாதியால் கோரப்பட்டுள்ள திருத்தல் பரிகாரமானது காலவரை வரம்புச் சட்டம், 1963ன் கீழ் பாதிக்கப்பட்டுள்ளதால், மேற்படி பரிகாரத்திற்காக வழக்குரையை திருத்தம் செய்ய மேற்படி வழக்கு விசாரணையை திறக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது, நிலைநிற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

<u>முடிவு:</u>

முடிவாக, மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**குளித்தலை**

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**குளித்தலை**